1970 மார்ச் 4]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இல்லை.

(இ) இதற்கு இடமில்லை.

Mercury lamps along Mount Road

205 Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. Minister for Local Administration be pleased to state—

(a) whether the entire Mount Road and upto the Parry's Corner would be lit up by powerful mercury vapour lamps; and

(b) if so, at what cost?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) ஆம்.

(இ) ரூ. 19.5 லட்சம் மதிப்பீட்டுச் செலவில் அமைக்கப்படும்.

THIRU K. VINAYAKAM : Whereas mercury vapour bulbs are found to be very satisfactory, will the Government take steps to light all the main streets in the City of Madras at the expense of the Government instead of depending upon the Corporation of Madras?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : தலைவர் அவர்களே, சென்னை நகரின் எல்லையில் இருந்து மவுண்ட் சாலை, பூவிருந்தவல்லி நெடுஞ்சாலை, ஈவினிங் பஜார், நேதாஜி சுபாஷ்சந்திரபோஸ் நெடுஞ் சாலை ஆகிய சாலைகளின் வழியாகப் பாரி முனை வரை ரூ. 19.5 லட்சம் செலவில் தெருவிளக்கை, மேம்படுத்த செயற்குறிப்பு அனுப்பியுள்ளார்கள். ஏற்கெனவே ரூ. 13.5 லட்சம் தாரப்பட்டு மர்மலாங் பாலத்தில் இருந்து மவுண்ட் சாலை மேம்படுத்தப் படுத்தப்பட்டுள்ளது. அதைப்பாரி முனை வரை நீட்டிக்க மேற் கொண்டுரூ. 6 லட்சம் கேட்கப்பட்டிருக்கிறது. அதைப்பற்றி அரசு பரிசீலித்து வருகிறது.

புதுக்கோட்டையில் கூட்டுறவு பயிற்சிப் பள்ளி.

*206 வினா.—புலவர் பொ. பொன்னம்பலம் : மாண்புமிகு கூட் டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், புதுக்கோட்டையில் கூட் டுறவுத் துறைக்கான பணிகளைப் புரிவதற்குரிய பயிற்சிப் பள்ளியை அமைத்துத் தரும் கருத்து அரசுக்கு உண்டா?

(இ) ஆமெனில், எப்பொழுது நடைமுறைக்கு வரும்?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

புலவர் பொ. பொன்னம்பலம் : கூட்டுறவு முறையின் வளர்ச்சி குறித்து மாவட்டந்தோறும் கூட்டுறவுப் பயிற்சிப் பள்ளியை அமைக்க வேண்டும் என்கிற அடிப்படையில் திருச்சி மாவட்டத்தில் புதுக்கோட்டையில் இனிமேலாவது அத்தகைய ஒரு பள்ளியை அமைக்க யோசிப்பார்களா?